02.06.2026

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

<u>அசல் வழக்கு எண்</u>**.121/2016**

**2026**-ம் ஆண்டு ஜீன் திங்கள் 2-ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய பி.வா.சா.**3**-வது நபரின் வாக்குமூலம் **1969**-ம் ஆண்டு 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி <u>திருமதி.**V**.கவிதா</u> என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லதா | க/பெ. | ஜீவானந்தம் |
| கிராமம் | பச்சபெருமாள்பட்டி வடக்கு | தாலுக்கா | துறையூர் |
| தொழில் | கிராம நிர்வாக அலுவலர் | சமூகம் | |
| வயது | 48 | நாள் | **02.06.2026** |

<u>**3** ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை</u>

நான் திருச்சியில் வசித்து துறையூர் தாலுகா, பச்சபெருமாள்பட்டி வடக்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்து சர்வே எண்.187. தாவா சொத்தை பார்வையிட்டு உள்ளேன். சர்வே எண்.187/11 கிழமேல் பாதை என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.187/17 என்பது தென்வடல் பாதை என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியம் அளிக்கிறார். சர்வே எண்.187/8 என்பதும் பாதை என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு பாதை என்கிறார். தற்போது

பூஸ்துதியில் சர்வே எண்.187/8 பாதையா இல்லை என்று சொன்னால் நான் பூஸ்துதியை தற்போது பார்வையிடவில்லை. சர்வே எண்.187/12 என்பது வட்ட கிணறு என்று சொன்னால் சரிதான். தற்போது சர்வே எண்.187/12 ல் பூஸ்துதியில் வட்ட கிணறு இல்லை என்று சொன்னால் காலி மனையாக சின்ன சின்ன புற்கள் முளைத்துள்ளன. சர்வே எண்.187/17-ல் பாதை உள்ளது. அதை சர்வேயரை வைத்து அளந்து பார்த்தால் தால் பாதை உள்ளதா என்று தெரியும்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

13.03.2026 முதல் தாவா கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். சர்வே எண்.187/13 என்பது நத்தம் அடங்கல் பதிவேட்டில் செந்தில்குமார் என்பவர் பெயரில் தான் தாக்கலாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் நில உடமை மேம்பாட்டு திட்டம் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் (UDR) என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.187/12, சர்வே எண்.187/13 ஆகிய சொத்துக்களுக்கு நேர் வடபுறம் தான் சர்வே எண்.187/11 ல் கிழமேல் பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.187/11 ல் உள்ள பாதை புல வரைபடத்தில் உள்ளது போன்று பூஸ்துதியில் உள்ளதா என்பதை சர்வேயரை

வைத்து நான் அளந்து பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். **சாட்சியிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் வாதியின் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறையில் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்ட ஆவணம் தான் என்று கூறியபோது சாட்சி வாங்கி படித்து பார்த்துவிட்டு அதில் கண்டுள்ள குறிப்புகள் படி மாவட்ட நில அளவை ஆய்வாளர் துறையால் வழங்கப்பட்டது என ஒப்புக்கொள்கிறார். இந்த ஆவணம் 19 தாள்கள் கொண்டது. வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வினா எண்.11க்கு மாவட்ட நில அளவை பதிவேட்டு துறையால் வழங்கப்பட்ட இந்த ஆவணங்களின் 0.23 சதுர மீட்டர் சர்வே எண்.187/11 கிழமேல் பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதாக பதில் தந்துள்ளார்கள் என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு சரிதான் என்று கூறுகிறார். சர்வே எண்.187/17 தென்வடல் பாதையை நான் பார்த்துள்ளேன். இந்த தென்வடல் பாதைக்கு மேல்புறம் உள்ள நிலம் யாருடையது என்று தெரியாது. சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு சர்வே எண்.187/18 திருமதி.கனகா மற்றும் சர்வே எண்.187/19 கருப்பக்கவுண்டருக்கும், சர்வே எண்.187/20 ராஜம்மாளுக்கும் பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். தென்வடல் பாதையின்

02.06.2026



மேல்புறம் சுவற்றை ஒட்டி அந்த குடியிருப்புகளால் வாழை மரம், தொட்டி உள்ளதா என்றால் பாதையை பார்த்தேன். வாழை மரம் பார்க்கவில்லை என்கிறார். மீண்டும் வாழை மரம், தொட்டி உள்ளது என்று கூறுகிறார். சர்வே எண்.187/12 ல் எத்தனை ஆண்டு காலம் அங்கு வட்ட கிணறு இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த வட்ட கிணறு யாரால் எப்போது முடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வட்ட கிணறு கிராம மக்களால் குப்பைகள் கொட்டி முடப்பட்டது என்பதை என்னால் மறுக்க முடியாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கிழமேல் பாதை மற்றும் தென்வடல் பாதை அரசுக்கு பாத்தியப்பட்ட உள்ளூர் பஞ்சாயத்துக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த இரு பாதைகளும் அரசாரங்கத்துக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசாங்கத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது, உள்ளூர் பஞ்சாயத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சமீபத்தில் நான் தாவா கிராமத்திற்கு பணி மாறுதலாகி வந்ததால், தாவா சொத்தை பற்றி முழு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை**

வா.சா.ஆ.11 ஆவணத்தில் சர்வே எண்.187/17 நிலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**வாதி தரப்பில் மறு குறுக்கு விசாரணை - இல்லை.**

**5, 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.**

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.